**தலைப்பு 16 – பாராளுமன்றம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 ஆகஸ்ட் 7 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என வெளிப்படுத்த முடியாது.

(ஆ) பாராளுமன்றத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

பாராளுமன்றத்தினால் உரிய திகதியில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விகு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று** | | |
| 01601 ஆம் இலக்க விடயத்திற்குரிய அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2 ½ மாத தாமதத்தின் பின்னர் 2019 மே 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரக கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கக்கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன் பின்னர் அரச உத்தியோகத்தர்களின் பீ கணக்கு தாமதமின்றி கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினுள் நிதிக்கூற்றுக்கள் ஏசீஏ-எவ் மாதிரியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் இடதுபுற நிரலில் குறிப்பிடப்பட்டிருந்த 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் புள்ளிவிபர பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் ஆகியவற்றுக்கிடையே 07 செலவின விடயங்களில் பெறுமதிகள் கூடுதலாகவும் செலவின விடங்களின் பெறுமதிகள் குறைவாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | ஒதுக்கீட்டுக் கணக்கு 2018 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியமையால் ஆரம்ப பணிகளில் சேதமேற்படாதவாறு உள்ளபடியான செலவினம் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், மதிப்பீட்டுப் பெறுமதிகள் குறிப்பிடும் போது குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி வேறுபட்டுள்ளது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு பதிவு செய்துகொள்ள உத்தேசித்துள்ளேன். |
| (ஆ) அரச ஆதனங்களுக்கு ஏற்பட்ட சேதமொன்று பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடம் அறவிட்டுக் கொள்வதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் நிதிப்பிரமாணம் 109 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு நிதிக்கூற்றுக்களில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், 2018 நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் சபைத் தொடரில் ஏற்பட்ட கலவரம் காரணமாக ஏற்பட்ட ரூபா 374,628 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள மாதிரகிளன் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | உபகரணங்களுக்கான நட்டத்திற்காக காப்பீட்டினை எதிர்பார்க்கின்றமையால் அந்த நட்டம் சேதம் அல்லது கைவிடுதல்கள் கடிதத்தில் உள்ளடக்கப்பட முடியாது. மேலும், இது நீதிமன்ற நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட காரணத்தினால் அந்த நட்டமான உபகரணங்கள் வழக்கு பொருட்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் அது தொடர்பில் இதுவரையிலும் இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடுகின்றேன். |

ஆன நட்டம் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கும் கூற்று உள்ளடக்குவதற்கு பதிலாக நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் கூற்று உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், அது தொடர்பில் நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட்டு தயாரிக்கப்பட வேண்டிய பொது 283, 284 மற்றும் 285 அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.6.3 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஏசீஏ – எவ் மாதிரியின் கீழான நிதி செயலாற்றல் கூற்று வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் திறைசேரியின் கட்டுநிதி பெறுவனவாக ரூபா 2,538,700,000 ஆன பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் அத்திகதியில் உள்ளவாறாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று திறைசேரியில் கட்டுநிதி பெறுவனவுகள் வருமானமல்லாத பெறுவனவுகள் கீழ் உள்ளடக்கப்படாத பெறுவனவுகள் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 267/2018 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையில் அறிவுரைகளின் பிரகாரம் அறிமுகப்படுத்தப் பட்ட மாதிரிகளுக் கமைய நிதிக்கூற்றுக்களில் பெறுமதிகள் மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரி படிவங்கள் தயாரிக்கும் போது தெளிவான அறவுறுத்தல்கள் குறித்த சுற்றறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அந்த விடயங்களை பதிவு செய்ய எதிர்பார்க்கின்றேன். |

## (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ - 6 மாதிரியின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் பெறுமதி ரூபா 8,816,905,074 ஆன போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக்கு கூற்று அந்த பெறுமதி இருமடங்காக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமை தொடர்பில் தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள், மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 8,816,905,074 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 267/2018 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறிமுகப்படுத்தப் பட்டள்ள மாதிரிகளுக்கமைய நிதிக்கூற்றுக்களின் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | தவறுதல்கள் காரணமாக ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் பொறிகள் எண்ணிக்கையை கணிப்பிடும் போது இந்த தவறு இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| (ii) | பாராளுமன்றத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் சில கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2013 சனவரி 24 ஆந் திகதிய SA/AS/AA/ சுற்றறிக்கை உடைய அரசகணக்குகள் திணைக்களத்தின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | வாதிவெல வீடமைப்புத் தொகுதி, நுவரெலியா செற்பதி இடம், ஜயவடனகம வீடமைப்புத் தொகுதி மற்றும் அவற்றுக்குரிய காணிகளின் பெறுமதிகள் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. கூடிய விரைவில் மதிப்பீடு செய்யும் கொள்ளும் பொருட்டு நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மதிப்பீடு இடம்பெற்றவுடன் உடனடியாக கணக்கு வைக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பாராளுமன்றத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கும் போது ஏற்பட்டிருந்த ரூபா 119,937,371 ஆன சொத்துக்களின் பெறுமதிகளினான வேறுபாடுகள் மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றில் வேறுபாடுகளின் கீழ் (பெறுமதி வேறுபாட்டிலான இலாப / நட்டம்) சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாது கைத்தவிர்ப்புக்களின் (மாற்றல்கள்) கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கும் போது நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் வேறுபாடுகளின் கீழ் (பெறுமதி மாற்றங்களின் இலாப / நட்டம்) சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | புதிய மாதிரியின் கீழ் குறியீட்டுட்டு இலக்கங்களுக்கு பொருந்தும் வகையில் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு சீராக்கம் செய்யும் போது கைதவிர்ப்பு நிரலில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மாதிரியின் கீழ்ப் பகுதியில் அதற்கான இலக்க குறிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (iv) | பாராளுமன்றத்திற்கு சொந்தமான வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கும் போது ஏற்பட்டிருந்த ரூபா 223,232,620 ஆன சொத்துக்களின் பெறுமதி மாற்றமடைதல், மீளாய்வாண்டின் போது நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் வேறுபாடுகளின் கீழ் (பெறுமதி மாற்றமடைலின் இலாபம் / நட்டம்) சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாது கைப்பற்றப்பட்டமையின் கீழ் மாற்றல்களாக (ஏனைய நிறுவனங்களின்) கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மீள மதிப்பீடு செய்யப்பட்ட கணக்கு வைக்கும் போது நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் வேறுபாடுகளின் கீழ் (பெறுமதி மாற்றமடைலின் இலாபம் / நட்டம்) சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏ.சீ.ஏ. 6 மாதிரியில் கீழ் பகுதியில் விசேட விளக்கமளித்தல் குறிப்பொன்று இந்த வாகனங்களின் பெறுமதி மாற்றமடைதல் தொடர்பில் வைக்கப்பட்டுள்ளது. |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணைக்க கூற்றுக்களின் பிரகாரம் 2018 | 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய இலக்கம் 118 | அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் மீதி ரூபா 3,175,733.12 எனும் |

| | | | |
|---|---|---|---|
| | டிசம்பர் 31 ஆம் திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 3,175,733 ஆக இருந்ததுடன் அவற்றுள் ரூபா 1,321,379 ஆன நிலுவை மீதிகள் 1 முதல் 23 வருடங்கள் வரையான கால வீச்சில் முன்கொண்டு வரப்பட்டவாறு இருந்தது. | உடைய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவுகளுக்கு தொடர்பு காண்பிக்கப்பட்ட மேற்படி சுற்றறிக்கையின் 8 ஆம் பந்திக்காக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | பெறுமதியில் ரூபா 1,321,378.76 ஆன நிலுவை மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது |
| (ii) | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான முற்பண கட்டுப்பாட்டுக்கணக்கின் மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல்களின் பொழிப்பின் கூட்டுத்தொகை ஆகியவற்றிற்கிடையே ரூபா 166,314 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மீதிகளை இணங்கம் செய்து உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான முற்பண கட்டுப்பாட்டு கணக்கின் மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல்களின் பொழிப்பின் கூட்டுத்தொகை ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டினை எதிர்காலத்தில் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் (ஏ.சீ.ஏ–எப் மாதிரி) உள்ளடக்கப்பட்டுள்ள 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | கட்டுநிதி மீதி உரிய முறையில் இனக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும் அந்த மாதிரி படிவங்களின் புள்ளிவிபரவியல் தரவுகள் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான கட்டுநிதி மீதி மற்றும் திறைசேரி கட்டுநிதி மீதி ஆகியவற்றிற்கிடையே வேறுபாட்டினை இணக்கம் செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சீராக்கல் கணக்கில் ஏற்பட்டிருந்த ரூபா 3,164,525 ஆன வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் கட்டுநிதி கணக்குக்காக தயாரிக்கப்பட்டிருந்த ஏசீஏ – 3 மாதிரியில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான கட்டுநிதி கணக்கின் மீதியின் மொத்த நிரலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த வேறுபாடு பாராளுமன்ற செலவின தலைப்பின் கீழ் ஓய்வூதிய திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,164,525 ஆன செலவினமொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டள்ள போதிலும் தெளிவான வழிகாட்டலொன்று மேற்கொள்ளப்பட்டிராமையால் இது தொடர்பான அரச கணக்குகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தொலைபேசியில் கோரியிருந்த போதிலும் திட்டவட்டமான பதிலொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. குறித்த தத்துவங்களுக்கு சேதம் ஏற்படாத வகையில் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 ஆம் ஆண்டினுள் திறைசேரியின் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 2,538,700,000 ஆன போதிலும் அந்த பெறுமதிக்கு ரூபா 47,581,736 ஆன ஏனைய பெறுவனவுகள் சேர்க்கப்பட்டு கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 2,586,281,736 ஆக நிதிக்கூற்றுக்களின் ஏசீஏ – 3 மாதிரியில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் 2018 சுற்றறிக்கையின் 7 (ii) கீழ் காண்பிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியாக கருதி ஏசீஏ 03 மாதரிக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டினுள் ஏனைய மூலங்களில் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 40,188,320 ஆன போதிலும் அந்த பெறுமதிய ரூபா 5,763,246 ஆக நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 03 மாதிரியில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் 2018 சுற்றறிக்கையின் 07 (v) இன் கீழ் தேறிய சொத்துக்கள் கணிப்பீடு மூலம் ஏற்படும் கட்டுநிதி இணக்கத்தின் போது உருவாகும் ரூபா 5,763,246 பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2018 ஆம் ஆண்டினுள் திறைசேரியின் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 2,538,700,000 மற்றும் ஏனைய மூலங்களிலிருந்தான பெறுவனவுகள் ரூபா 40,188,320 ஆக கட்டுநிதி பெறுவனவுகளின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 2,578,888,320 ஆகும். அந்த பெறுமதி திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்புக்களுடன் இணங்கியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் ஏசீஏ – 03 மாதிரியில் அந்த பெறுமதி ரூபா 2,592,044,982 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் 2018 சுற்றறிக்கையின் 7 (v) இன் கீழ் கணிப்பீட்டின் பிரகாரம் ஏற்படும் பெறுமதி ஏனைய மூலங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டமையால் அந்த வேறுபாடு உள்ளடங்கியிருந்தது. |
| (v) | 2018 ஆம் ஆண்டினுள் செலவினங்கள் மூலம் ரூபா 2,578,882,815 ஆன கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதி திறைசேரியின் அச்சீட்டு குறிப்புக்களுடன் இணங்கி இருந்தபோதிலும் நிதிக்கூற்றுக்களின் ஏசீஏ – 03 மாதிரியின் செலவினங்கள் மூலம் கட்டுநிதி தீர்ப்பனவு ரூபா 2,588,874,950 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் 2018 சுற்றறிக்கையின் 7 (v) இன் கீழ் கணிப்பீட்டின் பிரகாரம் ஏற்படும் பெறுமதி ஏனைய மூலங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டமையால் அந்த வேறுபாடு உள்ளடங்கியிருந்தது. |
| (vi) | மீளாய்வாண்டினுள் செலவினங்கள் மூலம் மற்றும் காசு மூலம் கட்டுநிதி தீர்ப்பனவுகளின் மொத்தம் ரூபா 2,578,888,320 ஆன போதிலும் அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 03 மாதிரியும் ரூபா 2,588,880,455 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் 2018 சுற்றறிக்கையின் 7 (v) இன் கீழ் கணிப்பீட்டின் பிரகாரம் ஏற்படும் பெறுமதி ஏனைய மூலங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டமையால் அந்த வேறுபாடு உள்ளடங்கியிருந்தது. |

**(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

-----------------------------------------------------------------------------------------

பாராளுமன்றத்தினால் கீழ்க்காணப்படும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பொருட்பதிவேட்டு புத்தகம்** | | |
| நிதிப்பிரமாணம் 454 (1) இன் பிரகாரம் பொருட் பதிவேட்டு புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 44 ஆவது பொது மாதிரிக்கமைய பொருட் பதிவேட்டு புத்தகம் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | பாராளுமன்றத்தின் கட்டிடத்தொகுதியினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. |

**(ஊ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல் வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான வகையில் குறிப்பிட்ட காலப்பகுதிகளினுள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.6 பந்தியின் பிரகாரம் ஒரு கணக்காய்வு ஐய வினாவுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ெப்பரவரி 27 ஆம் திகதிய மற்றும் 1A/22/XXII ஆம் இலக்க பணிப்பாளர் (நிதி) இன் கடிதத்தின் மூலம் கணக்காய்வு ஐய வினாவுக்கான பதில வழங்குவதற்கு மூன்று மாத காலம் பெற்றுத்தருமான கோரப்பட்டுள்ளது. |

**(எ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவரின் மாதாந்த கொடுப்பனவு பட்டியலின் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகை சம்பளத்தின் 40 சதவீதத்திற்கு மேற்படகூடாத போதிலும் 2018 நவம்பர் மாதம் 103 உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தில் 40 சதவீத எல்லையினை விஞ்சி கடன் தவணை கழிக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டு முதல் சம்பள பட்டியலின் மாதாந்த கழிப்பனவுகளின் கூட்டுத்தொகை 40 சதவீதத்திற்கு மேற்படக்கூடாதெனும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் பின்னர் வழங்கப்பட்ட கடனுக்காக 40 சதவீத எல்லைக்கு உள்ளடங்கலான கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |

---------------------

| | | | |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 104, 109 | 2018 ஆம் ஆண்டினுள் ஏற்பட்டிருந்த 13 வாகன விபத்துக்களின் சேதங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,611,376 ஆக இருந்ததுடன் அந்த விபத்துக்களுக்கா இந்த பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேதங்கள் நிதி பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உரிய காலப்பகுதியினுள் பொது 283, 284 மற்றும் 285 மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் உரிய முறையில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கினேன். |
| நிதிப்பிரமாணம் 804 (1) (2) | பாராளுமன்ற கட்டிட தொகுதியினுள் அமைந்துள்ள ஆளும் கட்சி பிரதான அமைப்பாளர் அலுவலகங்களுக்கு 90 பொருட்களும் 181 பொருட்களும், சபாநாயகரின் அலுவலகத்திற்கு 123 பொருட்களுமாக 304 கூட்டுத்தொகையான பொருட்கள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அந்த அலுவலகங்களின் பொருட் பதிவேட்கு உட்படுத்தக்கூடிய வகையில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மற்றும் பிரதான உள்ளடக்கத்துடன் இணங்குகின்றேன். |

**(iii)** **<u>சனாதிபதி செயலகத்தின் சுற்றிக்கை</u>**

| | | | |
|---|---|---|---|
| 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதிய SP/SB/07/15 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றிக்கை மற்றும் அதனோடு இணைந்த 2018 டிசம்பர் 7 ஆம் திகதிய PS/SP/SB/21/ 2018 ஆம் இலக்க சுற்றறிகை | இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளை கவனத்திற் கொள்ளாது பயிற்சியளித்தலுக்காக ரூபா 942,559 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றிறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | PS/SP/SB/21/2018 ஆம் இலக்க சுற்றிக்கை வெளியிடப்பட்டுள்ளது டிசம்பர் 07 ஆம் திகதியாகும். பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது அதற்கு பின்னரான திகதிகளிளாகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினை தயாரித்தல், நிதியேற்பாடுகளை மாற்றுதல், குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்பாடு, நிதியேற்பாடுகளை பயன்படுத்தல், சேமிப்புக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீண்டெழும் செலவின விடயங்கள் 19 க்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 803,450,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 115,757,623 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 88 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரியில் போதுமளவான கட்டுநிதி கிடைக்காமை வருடாந்த பாதீட்டு சமர்ப்பிக்கப்படாமை ஆகியவற்றின் காரணத்தால் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருந்தது. | | |
| (ஆ) | மூலதன செலவின விடயங்கள் 14 இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தத ரூபா 494,650,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 428,895,566 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 11 முதல் 98 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமை காரணமாக நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. |
| (இ) | மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 5 செலவின விடயங்களின் நிதியேற்பாடு ரூபா 77,650,000 தொகையும் சேமிப்பு ரூபா 35,169,702 தொகையும் இருந்ததுடன் அந்த சேமிப்பு அளவானது மற்றும் அதற்கு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த காரணங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ளும் போது பாராளுமன்றத்தினால் மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதற்குரிய தேவைப்பாடு உரிய வகையில் இனங்காணப்படாது நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த மை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | ஒதுக்கீட்டு கணக்கின் வரையறுக்கப்பட்ட இடவசதி காரணமாக பல்வேறு காரணங்களை குறிப்பிடும் இயலுமை இல்லாதிருந்தமை. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் iii இன் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு செலவின தலைப்புகளுக்குரியதாக வெளியிடப்படுவதுடன் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டியதுடன் அவ்வாறு அறிக்கை இடப்படாத எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு முன்னைய ஆண்டின் செலவினமாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட கூடாத போதிலும் திறைசேரியினால் ஒவ்வொரு செலவின தலைப்புகளுக்குரியதாக வெளியிடப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பாடாத ரூபா 36,862,264 ஆன மீண்டெழும் செலவினம் 2019 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தது. | சுற்றிறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் திறைசேரியினால் வெளியிடப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டியதுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு முன்னைய வருடத்தின் செலவினமாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட கூடாது. | குறித்த மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்கள் குறித்த பிரிவுகளிலிருந்து தாமதித்து அனுப்பப்பட்டுள்ளமையால் பொறுப்புக்களுக்கு உள்ளடக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) நிதித்பிரமாணம் 94 (i) இன் பிரகாரம் சேமிப்புக்களை மிஞ்சி பொறுப்புகளுக்கு கடப்பட கூடாத போதிலும் (நிதிப்பிரமாணம் 94 (ii) இன் பிரகாரம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் நீங்கலாக) நிறுவனத்தினால் 04 செலவிட விடயங்களின் சேமிப்பக்களை மிஞ்சி ரூபா | நிதிப்பிரமாணம் 94 (i) இன் பிரகாரம் சேமிப்புக்களை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக்கூடாது. | பொறுப்புக்களுக்கு கடப்பட முடியாத போதிலும் சேமிப்புக்களை விஞ்சி கடப்பட்டுள்ளது குறித்த சேவை மற்றும் விநியோகத்தின் அத்தியாவசிய தன்மை மற்றும் அவசரமானவை என்பதாலாகும். |

2,114,557 ஆன பொறுப்புகளக்கு கடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 (அ) பாராளுமன்ற அமர்வுகளை நடாத்துதல்

2018 ஆம் ஆண்டு 08 பாராளுமன்றத்தில் 77 கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், அந்த 77 கூட்டங்களுள் ஒரு கூட்டத்தில் 25 பாராளுமன்ற உறுப்பினர்களிலும் குறைந்த தொகையினர் கலந்து கொண்டதுடன், 06 கூட்டங்களில் 200 உறுப்பினர்களுக்கும் கூடுதலானோர் கலந்து கொண்டனர். அத்துடன் 04 கூட்டங்கள் 05 தொடக்கம் 26 நிமிடங்களிலும், 03 கூட்டங்களும் 38 தொடக்கம் 56 நிமிடங்களில் முடிவடைந்துள்ளன.

#### (ஆ) சட்ட வரைபுகளை அங்கீகரித்தல்

2018 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 39 சட்டமூலங்களினுள் 35 சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்ட 06 தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

#### (இ) அரசாங்க கணக்குகள் குழு

அரச கணக்காய்வு சபையினால் 2018 ஆம் ஆண்டில் 18 நிறுவனங்கள் செயற்குழு முன் அழைக்கப்பட்டு 20 விசாரணைகளும் விசேட விடயங்கள் தொடர்பான 04 விசாரணைகளும் நடாத்தப்பட்டன. அரச கணக்காய்வு சபையினால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் அடங்கிய பிரதான அறிக்கை 2018 யூன் 19 ஆந் திகதி பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

#### (ஈ) அரச முயற்சிகள் தொடர்பான குழு

அரச தொலை முயற்சிகள் 2018 ஆம் ஆண்டில் 32 நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்கு செயற்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், விசாரிக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான அறிக்கையொன்று 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

#### (உ) மக்கள் முறையீட்டு செயற்குழு

2018 ஆம் ஆண்டில் செயற்குழுவில் 621 புகார்கள் சமர்ப்பிக்கப்பட்டன அவற்றுள் நிலையியற் கட்டளைகளுக்கு ஏற்ப அமையாமையினால் செயற்குழு பணியகத்தினால் 239 மகஜர்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவ்வாண்டில் 19 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டு இதில் 382 மகஜர்கள் ஆராயப்பட்டன. இதில் 92 மகஜர்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 5 மனுதாரர்களின் உதவிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

### 3.2 திட்டமிடல்

#### 3.2.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் அடங்கிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அத்திட்டம் ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்னரே தகவல்களை பெற்று திட்டமிடப்படவில்லை. அத்துடன் அத்திட்டங்கள் 2018 யூலை 20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டதுடன் 2018 முதல் அரையாண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு திட்டங்களின் படி செயற்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கங்களின் படி உரிய விதத்தில் செயற்படுத்தப்பட்டன. |
| (ஆ) | மீளாய்வு ஒழுங்கு விதிகள் மற்றும் கண்காணிப்பின் ஊடாக செயற்பாட்டு திட்டங்களின் செயற்பாடுகள் மற்றும் எதிர்பார்த்த முடிவுகளை எட்டியுள்ளதா என்பதை போதிய அளவு உறுதிப்படுத்தப்படவில்லை. | செயற்பாட்டு திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்பட்டதா என்பது குறித்து போதியளவு உறுதிப்படுத்தப்பட வேண்டும். | பாராளுமன்றத்திலும் அதன் குழுவின் செயற்பாடுகள் நாளாந்த தேவைகளுக்கு ஏற்ப பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்து செயற்குழுவினால் தீர்மானங்கள் எடுக்கப்படும். அதற்கு இணைவாக பாராளுமன்ற செயலாளர் நாயக அலுவலகத்தின் பணிகளும் மாற்றம் பெறும். இதனால் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் திட்டமிடப்பட்ட வகையில் செயற்படுத்துவது சிரமமான பணியாகும். |
| (இ) | செயற்பாட்டு திட்டங்களுக்கு ஏற்பட | செயற்பாட்டு திட்டத்திற்கு ஏற்ப | செயற்பாட்டு திட்டங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் |

| | | |
|---|---|---|
| மீளாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்படாமையினால் செயற்பாட்டு திட்டத்திற்கு ஏற்ப முன்னேற்றத்தை ஆராய கணக்காய்வினால் முடியவில்லை. | மீளாய்வுகள் பரிசீலிக்கப்பட வேண்டும். | பணிகள் மற்றும் எதிர்பாராத விதத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அறிக்கையில் அடங்கியுள்ளன. |

## 3.3 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சீர்திருத்தப்பட்ட கொள்முதல் திட்டத்தின் குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூபா 645,850,000 இல் அடங்கியுள்ள மதிப்பீட்டு செலவினம் ரூபா 294,641,000 ஆன 12 பணிகள் காணப்பட்டதுடன் பணிகளுக்காக மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படவில்லை. | கொள்முதல் திட்டத்தின் படி தயாரிப்பதற்கு மற்றும் திட்டத்தின் பிரகாரம் பெறுகைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமையினால் அதற்கான காரணங்கள் 2019.05.31 ஆந் திகதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் கொள்முதல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 167,000,000 ஆன 03 கொள்முதல் பணிகளுக்கு மீளாய்வு ஆண்டில் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்த போதும், அது பூர்த்தி செய்யப்படவில்லை. | கொள்முதல் திட்டத்திற்கு ஏற்ப கொள் முதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒவ்வொரு கொள்முதல் பணிகளும் தாமதமாவதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பாராளுமன்றத்திற்கு சொந்தமான கமநல மாளிகை அமைந்துள்ள | பாராளுமன்றத்திற்கு சொந்தமான காணிகளின் | கமநல மாளிகை அமைந்துள்ள காணி கட்டிடங்கள் சிராவஸ்மி |

| | | | |
|---|---|---|---|
| | காணி மற்றும் சிராவஸ்தி மாளிகை அமைந்துள்ள காணிகளின் உரிமையை பொறுப்பேற்கும் பணிகள் பூர்த்தியடையவில்லை. | உரிமை மற்றும் நிலைப்பாட்டை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாளிகை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களுக்கான காணிகளினை உரிமையை பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதி 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டில் பொருட்களின் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டுக்கான பொருள் கணிப்பீட்டு அறிக்கை 2019 செப்டம்பர் 30 ஆந் திகதி கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு ஏற்ப செயற்பட வேண்டும். | வேலைப்பழு அதிகரிப்பு, உள்ளடக்க வேண்டிய பகுதிகளின் அளவின் அதிகரிப்பினால் பூர்த்தி செய்ய முடியாது போனாலும் 2019 யூலை 15 ஆந் திகதிக்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (இ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2017 மே 04 ஆந் திகதி வெளியிடப்பட்ட 02/2017 ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவை சுற்றறிக்கை மற்றும் 2016 திசெம்பர் 22 ஆந் திகதி தேசிய நூலக சேவை சபையின் (2004/நூச/1(2016-திருத்தப்பட்ட) இலக்க சுற்றறிக்கையின் பிரிவின் படி வாசகர்களின் பயன்பாட்டுக்காக நூலகங்களினால் பொறுப்பேற்கப்பட்ட எழுத்துமூல அச்சுமூல, செவிப்புலன் மற்றும் இலத்திரனியல் நூலகங்களினால் பொறுப்பேற்கப்பட்ட எழுத்துமூல அச்சுமூல, | குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். | இருப்பு மதிப்பீடுகளுக்காக நியமிக்கப்பட்ட சபை அறிக்கையை பூர்த்தி செய்து ஒப்படைத்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செவிப்புலன் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் உள்ளிட்ட நூலக பொருட்கள் தொடர்பாக வருடாந்த மொத்த மதிப்பீடு கட்டயாம் நடாத்தப்பட வேண்டும். எனினும், 2018 ஆம் ஆண்டு நூலக நூல் மதிப்பீடுகுள் நடாத்தப்படவில்லை. | | |
| (ஈ) | பாரா்ளுமன்றத்தினால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் தொடர்பான கணிப்பீடுகளுக்கு (2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில்) குறித்த அறிக்கையை பரிசீலித்த போது எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 184 பொருட்கள் குறைவாக காணப்பட்டன. | பொருட்கள் குறைவடைந்தமை தொடர்பாக நிதி சட்ட விதிகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். | பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் அடிப்படை உள்ளடக்கத்துடன் இணங்குகின்றேன். |

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 142 அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக திட்டமிடப்பட்ட இரண்டு செயற்பட்டறைகளில் 46 உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளாமையினால் அவர்களுக்கு விடுதிகளுக்காக பொறுப்பேற்கப்பட்ட ரூபா 153,499 தொகை மற்றும் அவ்வதிகாரிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ஆடைகளுக்காக ரூபா 34,320 என மொத்தமாக ரூபா 187,819 தொகை பயனற்று போயுள்ளது. | திட்டமிடப்பட்ட வகையில் செயற்பட வேண்டும். | ஒரு பயிற்சி பட்டறைக்கு இரண்டு நாட்களில் 100 பேர் கலந்து கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களுக்காக 29 பேர் அதில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய செயற்பாட்டாளர்களுக்கு வருகை தராதவர்கள் வருகை தராமைக்கான காரணம் எழுத்துமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.7 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 13,329,732 செலவிடப்பட்டு 2008 நவம்பர் 01 ஆந் திகதி பராளுமன்ற பொலிஸாருக்கு பாதுகாப்பு தொலைக்காட்சி தொகுதியொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்பம் முதல் அவை செயற்படாமையினால் சீர்செய்து அத்தொகுதியை முன்னெடுத்துச் செல்ல முடியாமையினால், 7 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி புதிய தொகுதியொன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் புதிய தொகுதியை அமைக்க ரூபா 159 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினமாக 2018 ஆம் ஆண்டு சீர்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2008 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட புதிய தொகுதியில் பல குறைபாடுகள் இருந்த நிலையில் அத்தொகுதிக்கு வழங்கப்பட்ட நிறுவனத்திற்கு 2019 ஆம் ஆண்டு கொள்வனவு செய்ய எதிர்பார்த்த சீசீரிவி தொகுதியின் ஒப்பந்தத்திற்கு ரூபா 116.5 மில்லியன் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு ரூபா 13,329,732 செலவில் ஏற்படுத்தப்பட்ட சீசீரிவி தொகுதியில் காணப்பட்ட | அரச செலவின வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) மற்றும் பந்திகளின் படி உயர் தரத்திலான குறைந்த செலவினத்துடன் பயன்கயை பெறுகை வகையில் அதிஉயர் பொருளாதார அணுகூலங்களை வழங்குவதற்கும் உரிய காலத்தில் உரிய நேரத்தில் சிறந்த பயன்களுடன் கூடிய செலவினங்களை மேற்கொள்வதற்கு துரிதமாக பணிகளை முன்னெடுக்க வேண்டியிருந்தது. | குறைபாடுகள் மற்றும் தவறுகள் குறித்து ஒப்பந்த கம்பனி அறிவுறுத்தப்பட்ட போதிலும், அந்நிறுவனங்களினால் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் துரிதமாக புனரமைக்க வேண்டியிருப்பதாக கூறிய போதிலும், தாமதம் காரணமாக 2019 சனவரி 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | பலவீனங்கள் தொடர்பாக கண்காணிக்கப்பட்டு பலவீனங்கள் கீழ்வருமாறு அமைந்திருந்தன. | | |
| (ஆ) | சீசீரிவி கட்டமைப்பினை பொருத்துதல் நிறைவு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய குறைபாடுகளை பூர்த்தி செய்யாது, பிடிகாசு நீங்கலான எஞ்சிய ரூபா 12,663,245 ஆன தொகை ஒப்பந்தக்காரருக்கு 2008 திசெம்பர் 02 ஆந் திகதி செலுத்தியமை | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2008 நவம்பர் 05 ஆந் திகதி கட்டமைப்பு பாராளுமன்றத்திற்கு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில், கட்டமைப்பின் அனைத்து பொருத்துதல்களும் மற்றும் செயற்திறன் உரிய முறையில் இடம்பெறாததுடன், கட்டமைப்பிற்குரிய உதிரிப்பாகங்கள் பாராளுமன்றத்தின் பொலிசுக்கு ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய பிடிகாசு நீங்கலாக கட்டமைப்பினை நிறுவுவதற்குரிய கட்டணங்களை செலுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | 2009 சனவரி மாதம் முதல் குறைபாடுடன் காணப்பட்ட ஜயந்திவிழாவில் நிறுவப்பட்டுள்ள அசையும் கமராவின் பழுதுபார்த்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ள போது, அந்த பழுதுபார்த்தலை மேற்கொள்ளாது மற்றும் கட்டமைப்பின் பெற்றித்தன்மை தொடர்பில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 666,487 ஆன பிடிகாசு விடுவிக்கப்பட்டுள்ளது. | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய அசையும் ஜயந்திபுரவின் உரிய இடத்தில் துரிதமாக பொருத்துவதற்கு ஹேலீஸ் நிறுவனத்தினால் சான்றுப்படுத்திய பின்னர் காசாக நூற்றில் ஐம்பது சதவீதம், அதாவது ரூபா 333,243.30 தொகை 2010 மே 10 ஆந் திகதி விடுவிக்கப்பட்டமை. ஹேலீஸ் நிறுவனத்தினால் வங்கிப் பிணைமுறியொன்றை சமர்ப்பித்த பின்னர் ஐம்பது சதவீத தொகையான ரூபா 333,243.30 விடுவிக்கப்பட்டுள்ளது. 2010 யூன் 30 ஆந் திகதி உயர் தொழில்நுட்பத்துடனான கெமரா ஒன்றினை ஹேலீஸ் நிறுவனத்தினால் குறித்த இடத்தில் பொருத்துதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | இந்தக் கட்டமைப்பினை பாராளுமன்றத்திற்கு | அரசின் பெறுகைகள் | கட்டமைப்பு பொருத்தப்பட்ட பின் அதன் செயற்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்கும் போது, அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1 மற்றும் 8.12.3 பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் காரணம் கற்பிக்கும் விசாரணையொன்று மேற்கொள்ளப் பட்டிராததுடன் ஆரம்பத்தில் வழுவினை இனங்காணும் சந்தர்ப்பம் மற்றும் குறைபாட்டுடனான உருப்படிகளை மாற்றும் சந்தர்ப்பம் தவறவிடப்பட்டிருந்தது. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்பில் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அந்த உபகரணங்கள் பாராளுமன்ற பொலிசுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கட்டமைப்பில் பின்னர் ஏற்பட்ட குறைபாடுகளின் நிலைமைகளை பழுதுபார்ததல் மற்றும் உருப்படியை மற்றும் உத்தரவாத காலத்திற்கு இணங்க பணம் செலுத்தப்படாது குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. |
| (உ) | கட்டமைப்பினை கையளித்து 07 மாங்கள் கடப்பதற்கு முன்னர் 2009 மே 22 ஆந் திகதி கட்டமைப்பின் முதலாவது கெமரா செயலிந்திருந்ததுடன் மற்றும் செயழிலப்புக்கள் காரணமாக கட்டமைப்பு ஒப்படைக்கப்பட்டு ஒரு வருடத்தினுள் 27 சந்தர்ப்பங்களின் பழுதுபார்க்கப்பட்டது. | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய கட்டமைப்பு என்ற போதிலும் பல்வேறு காரணங்களினால் அடிப்படையில் தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்படக்கூடும். மேற்குறிப்பிட்டவாறு வெளிப்படுத்தப்பட்ட காலத்தினுள் பணம் செலுத்தாது அந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் இயலுமை காணப்படுவதுடன், கட்டமைப்பின் பழுழுபார்த்தல்கள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டது. |
| (ஊ) | சீசீரிவி கட்டமைப்பு செயலிழந்தமை மற்றும் குறைபாடுகள் தொடர்பில் அவ்வவ்போது ஒப்பந்தகாரருக்கு எழுத்துமூலம் அறிவித்த போதிலும், உத்தரவாதக் காலத்தினுள் கட்டமைப்பு திருத்தப்பட்டிராததுடன், கட்டமைப்பினை நிறுவி கையளித்த 2008 நவம்பர் 05 ஆந் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு வரை அவ்வவ்போது ரூபா 1,757,793 கூட்டுப் பெறுமதியுடைய கெமரா மற்றும் உதிரிப்பாகங்கள் | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அனைத்து உபகரணங்களையும் பாராளுமன்றத்திற்கு மீள கையளிக்குமாறு எந்தவொரு சந்தர்ப்பதிலும் நினைவுறுத்தல்களுடன் வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையிலும், அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தக்காரரிடமிருந்து கிடைத்திருந்த போதிலும், அவை புதுப்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 15 ஆந் திகதியளவில் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரி காணப்பட்ட 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையானா சீ.சீ.ரீ.வீ கட்டமைப்பிற்காக பயன்படுத்தப்பட்ட கம்பிகள், புதிய கட்டமைப்பிற்காக பயன்புடுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை காரணத்தால் ஒப்பந்ததாரரால் புதிய கட்டமைப்பிற்காக பழைய கம்பிகள் பயன்படுத்தப்பட்டதா என்பது, பழைய கம்பிகள் பயன்படுத்தப்பட்டு இருப்பின் அதற்கு முன்னர் ஒப்பந்ததாரரால் அந்த பழைய கம்பிகளினை புதிய கட்டமைப்பிற்கு பொருத்தமானவை என பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது ஊறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதால் கட்டமைப்பினை நிறுவிய ஆரம்பம் முதல் கமாராக்கள் செயலிழந்தது பழைய கம்பிகளை பயன்படுத்தியமையால் என பரிசோதித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 28 அவதானிப்பு கமராக்களுடனான முன்னர் காணப்பட்ட கட்டமைப்பிற்குரிய பிரதான கட்டிடத்தினுள் காணப்பட்ட நல்ல நிலமையிலான கம்பிகள் புதிய கட்டமைப்பினை நிறுவும் போது பயன்படுத்தப்படுவதுடன், 41 அவதானிப்பு கமராக்களுக்காக புதிய கட்டமைப்பிற்கு மேலதிகமாக அனைத்து கமராக்களுக்கும் புதிய கம்பிகள் பயன்படுத்தப்பட்டது. |
| (ஏ) | ஒப்பந்ததாரரால் 10 வருடங்களாக உதிரிப்பாக சந்தையில் உள்ளதாக சான்றுபடுத்தியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டளவில் பழுதுபார்த்தல்களுக்காக உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்வதிலுள்ள | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிமை. | நிலவும் கட்டமைப்பின் காணப்படும் தொழில்நுட்ப குறைபாடுகள் மற்றும் அதன் பிரகாரம் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல் கவனத்திற் கொள்ளப்பட்டு பாராளுமன்றத்தின் கட்டிடத் தொகுதியின் பல்வேறு இடங்களை உள்ளடக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | சிரமம் காரணமாக ஒப்பந்ததாரரால் அதற்காக அதற்காக நீண்ட காலமொன்றினை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் சில பழுதுபார்த்தல்கள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படாமை போன்ற பிரச்சினைகுரிய நிலமைகள் காணப்படுகின்றமையால் புதிய கட்டமைப்பினை தாபித்தல் 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி முன்மொழியப்பட்டிருந்தது. | | வகையில் மற்றும் தற்போது நிலவும் உயர் தொழில்நுட்ப நிலமையின் கீழுள்ள முழுமையான டிஜிட்டல் பாதுகாப்பு கமரா கட்டமைப்பினை பொருத்துவதற்கு பாராளுமன்றத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | 2012 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2019 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் ஜயந்திபுர பாதுகாப்பு கமரா கட்டமைப்பின் 02 கமராக்கள் செயலிழந்துள்ளதுடன், பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதல் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினால் மீளளிப்பு செய்யும் உடன்படிக்கையின் அடிப்படையில வழங்குனரால் கம்பிகள் இணைக்கப்பட்டு பழுதுபார்ப்பதற்காக ரூபா 96,717.63 தொகையான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், பின்னர் பழுதுபார்த்தல் பணிகள் பாராளுமன்றத்தல் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன், மீண்டும் புதிய மதிப்பீடுகள் கோரப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 666,600 ஆன மதிப்பீடொன்று வழங்குநரால் முன்வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணிகளை மேற்கொள்ளல் இராணுவத்தின் நிர்மாண பணிகள் நிறைவடையும் வரை இடைநிறுத்தப்பட்டது. |
| (ஒ) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 103,248,943 தொகையான பாராளுமனறத்தின் சபை அமர்வின் மைக்கிரோ போன் பொருத்துதல் ஒப்பந்தமும், ரூபா 116.5 மில்லியனான பெறுமதியுடைய பாராளுமன்றத்தின் | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாராளுமனறத்தின் சபை அமர்வின் மைக்கிரோ போன் பொருத்துதல் ஒப்பந்தத்திற்காக கேள்விச் சபையினால் Hayleys Industrial Solutions கம்பனியின் சிறிப குறைபாடுகள் காணப்படுவதாக சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | பொலிஸிற்காக நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள புதிய சீ.சீ.ரீ.வீ கட்டமைப்பும் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதியளவில் இந்த ஒப்பந்ததாரருக்கே கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு முன்னர் ஒப்பந்ததாரரால் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 13,329,732 ஆன செலவில் தாபிக்கப்பட்ட சீ.சீ.ரீ.வீ. கட்டமைப்பில் காணப்பட்ட சிக்கல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | போதிலும், கேள்வியின் பிரகாரம் அந்த கம்பனிக்கு கேள்வியை கையளிக்காத வகையில் அந்த குறைபாடுகள் தாக்கம் செலுத்தவில்லை என கேள்விச் சபை தீர்மானித்திருந்தது. |
| (ஓ) | பொலிஸ் சீ.சீ.ரீ.வி கட்டமைப்பிற்காக கிடைத்திருந்த Apple Mack Book Pro மடி கணனி, 2008 நவம்பர் 11 ஆந் திகதி பொறியியல் பிரிவினால் பாராளுமன்ற பொலிஸிற்கு கையளிக்காது, அதற்கு பதிலாக 2009 ஆகஸ்ட் 17 ஆந் திகதி பாராளுமன்ற விநியோகப் பிரிவின் களஞ்சியத்தில் HP Compaq Dx2810 கணனி மற்றும் அதனுடன் தொடர்புடைய உத்திரிப்பாகங்கள் பாராளுமன்ற பொலிஸிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பாராளுமன்றத்தின் பொலிஸினால் பதிவேட்டிற்குட்படுத்தப்பட்டிருந்த சீ.சீ.ரீ.வி கட்டமைப்பிற்காக கிடைத்திருந்த Apple Mack Book Pro மடி கணனி 2019 பெப்ரவரி15 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தின் பொலிஸிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | Apple Mack Book Pro மடி கணனி கணனிக் கட்டமைப்பின் தொலைக் கட்டுப்பாட்டு கணனியாக பயன்படுத்தும் பொருட்டு இணைப்பு பொறியியலாளர் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | லை. | | |
| (ஔ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக உத்தேச பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டமும், அதற்கடுத்த வருடத்திற்கான பெறுகை பணிகள் விரிவாக தயாரிக்கப்பட்டு அதற்கமைய ஆண்டினுள் பெறுகைகளை மேற்கொள்ள பெறுகை நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட் வேண்டியதுடன், பிரதான பெறுகைகள் திட்டம் பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நாட்டில் அவ்வப்போது நிலவும் நிலமைகளின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் மற்றும் அதன் குழுக்களின் செயற்பாடுகள் மாற்றமடைதல், கிடைக்கும் வரையறுக்கப்பட்ட பெறுகையின் அளவு, வருடாந்தம் தயாரிக்கப்படும் பெறுகைகள் திட்டத்தினையும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் திருத்த நேர்கின்றமை, திறைசேரியின் நிதியேற்பாடு கிடைக்காமை மற்றுமட திட்டமிடப்பட்ட முன்மொழிவுகளையும் அந்த வருடத்தினுள் நடைமுறைப்படுத்த முடியாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 3 வருடத்திற்காக பெறுகைகள் திட்டமொன்றினை தயாரித்தல் மிகவும் கடினமானதாகும். |
| (க) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 இன் பிரகாரம் ஒவ்வொரு பெறுகை நடைமுறையினதும் ஆரம்பித்த சந்தர்ப்பம் முதல் நிறைவு செய்யும் வரையிலும், கால அடிப்படையில் விபரிக்கும் பெறுகை நடைமுறைகள் மற்றும் காலத்தினை தீர்மானித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | எதிர்வரும் காலங்களில் அவ்வாறான திட்டங்களை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (கா) | 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டத்தில் திருத்தமொன்றாக உள்ளடக்கப்படாத சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் முற்றத்தில் விளக்குகளை | பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு மற்றும் திட்டத்தின் பிரகாரம் பெறுகையினை | 2017 ஆம் ஆண்டின் ஒவ்வொரு பிரிவினாலும் கோரப்பட்டிருந்த முன்மொழிவுகளில் 2018 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது. எனினும், கௌரவ சபாநாயகரின் |

| | | |
|---|---|---|
| பெருத்துவதற்கான தூண்களை பெருத்துவதற்கான பெறுகையினை மேற்கொண்டு அதற்காக ரூபா 1,655,080 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அலுவலகத்தினால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் பின்னர் ஏற்பட்ட தேவைப்பாட்டின் அடிப்படையில் புதிய முன்மொழிவொன்றிக அதனை நடைமுறைப்படுத்த நேர்ந்தது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனத்திற்கான செலவினம்

மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஆளனி வேதனம் செலவின விடயத்திற்காக ரூபா 36.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 930 ஆனதுடன், அத் திகதியில் உள்ளபடியான வெற்றிடங்கள் 101 மற்றும் மிகை 06 ஆகும். | வெற்றிடங்கை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் மாதம் வரையிலும் பதவியணியின் மொத்த வெற்றிடங்கள் 101 ஆகும். |
| (ஆ) மீளாய்வாண்டினுள் பதவியணியை பயிற்றுவிப்பதற்காக ரூபா 3,723,250 தொகை செலவிடப்பட்டு பாராளுமன்றத்தின் பதவியணியில் 477 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் போது பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியேற்பாட்டில் 74 சதவீதமாகும். | திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டினுள் பதவியணியின் 331 பேரை பயிற்றுவிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 5,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. திட்டத்தின் பிரகாரம் கூடுதலானவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக மேலதிக நிதியினை பெற்றிராமையை சுட்டிக் காண்பிக்கின்றேன். எவ்வாறெனினும் எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் பதவியணியை பயிற்றுவித்தல் மேற்கொள்ள முயற்சி செய்வதாக குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |